20th March 1961]

Sri K. SATTANATHA KARAYALAR : ஸார், இந்த வேலையாட்களைப் பொறுத்த மட்டில், ஏற்கனவே இருக்கும் ஆட்களுக்கு 8 மணி நேரம் வேலைக்கும் பிறகு வாராந்தர விடுமுறை அவசியம் என்று உணர்ந்து, அதிக ஆட்கள் வேண்டுமானாலும், சில லட்ச ரூபாய்கள் செலவானாலும், பே கமிஷன் சிபாரிசுகளால் எவ்வளவோ செலவுசெய்யும் சர்க்கார் இதையும் பொருட்படுத்தாமல், அவர்களுக்கு ஒரு கால வரம்பு வைத்து, படிப் படியாக ஆட்கள் எடுத்து வாராந்தர விடுமுறை கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : நர்ஸிங் ஸ்டாபுக்கே எல்லோருக்கும் இப்பொழுது கொடுக்கவில்லை. ஸிடியில், மற்றும் மெசிங் ஹாஸ்பிடல் உள்ள மொபசல்களிலும் கொடுக்கப் படுகிறது. பிற்பாடுதான் மற்ற ஹாஸ்பிடல்களில் அம்மாதிரிக் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் இவர்களுக்கு வாராந்தர விடுமுறை பற்றி கவனிக்க வேண்டும்.

Sri S. M. ANNAMALAI : ஸார், இந்த அறிக்கையில் அதிகமான ஆட்கள் வேண்டியிருப்பதால் ஹாலிடேஸ் கொடுக்கவில்லை என்றிருக்கிறது. இந்த 21 கேட்டிகரிகளில் எவ்வளவு ஆட்கள் வேலை செய்கிறார்கள் ? புள்ளி விவரங்கள் கொடுக்க முடியுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்பொழுது கொடுக்க சாத்திய மில்லை.

Cyclone relief (Vedaranyam Block)

* 941 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் பொதுமராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1955-ம் வருடம் வீசிய புயல் நிவாரணத்திற்காக வேதாரண்யம் பிளாக்கில் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன ?

(இ) அவைகளில் எத்தனை வீடுகள், எங்கெங்கே சமீபத்தில் பெய்த மழையினால் வீழ்ந்துவிட்டன ?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Two hundred and sixty-six houses were constructed in Vedaranyam block under the cyclone relief housing scheme of 1955;

(*b*) Thirty-one houses collapsed due to recent rains in the following places in Vedaranyam block :—

Maharajapuram colony	26
Agasthiampalli colony	2
Thethagudi southern colony	1
Pushpavanam colony	2
Total ...	31

Sri A. VEDARATHNAM : ஸார், இந்தக் கட்டிடங்கள் திறந்து நான்கு மாதங்களுக்குள்ளாகவே சர்க்கார் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்கள் படி இத்தனை வீடுகள் விழுந்து இருக்கின்றன. ஆனால் உண்மையிலேயே 80 வீடுகள் கட்டிய காலனியில், 50 வீடுகளுக்கு மேல் விழுந்து இருக்கின்றன. சரியாகக் கணக்கு எடுக்கவில்லை. இப்படி நாலு மாதங்களுக்குள் விழுந்து விடக்கூடிய கட்டிடங்களைக் கட்டியதற்குப் பொறுப்பாளி யார் ? அவர்கள் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? அவர்களிடம் எக்ஸ்ப்ளநேஷன் வாங்கப்பட்டதா ?

The Hon. Sri P. KAKKAN : சமீபத்தில் ஏற்பட்ட பெருமழை காரணமாக இந்த வீடுகளில் சில விழுந்து இருக்கின்றன. யார் பொறுப்பு, அதிகாரிகளா அல்லது மக்களா என்று கவனிக்க வேண்டியதில் கனம்

[20th March 1961

அங்கத்தினருக்கும் கூட பொறுப்பு இருக்கிறது என்று எண்ணுகிறேன். கலெக்டருடைய தகவல்களைக் கொண்டு இப்பொழுது விவரங்கள் சொன்னேன்.

SRI A. VEDARATHNAM : இதற்கு எவ்வளவு செலவாயிற்று, விழுந்த வீடுகளைப் புதிப்பிக்க என்ன உதவி அளிக்கப்படுகிறது என்று தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : விழுந்த வீடுகளைப் புதிப்பிக்க ரூ. 3,35,000 கொடுத்திருக்கிறோம் ; லேசாக விழுந்த வீடுகளுக்கு ரூ. 15 வீதமும், பெரும் பகுதி விழுந்து விட்ட வீடுகளுக்கு ரூ. 30 வீதமும் கொடுத்து வருகிறோம்.

"Bleeding Madras"

*942 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் பிளீடிங் மதறாஸ் துணி இதுவரை எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டது ?

(இ) எவ்வளவு ஏற்றுமதி செய்யப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 4,25,000 yards (Four lakhs and twenty-five thousand yards) of Bleeding Madras valued at Rs. 7,44,000 (Rupees seven lakhs and fortyfour thousands) were produced from 1st January 1960 to 31st December 1960.

(*b*) 18,06,002 yards (eighteen lakhs, six thousand and two yards) valued at Rs. 41,70,938 (Rupees forty-one lakhs, seventy thousand, nine hundred and thirty-eight) was exported during 1960. This includes the stock of cloth produced during 1959 also.

*943 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் " பிளீடிங் மதறாஸ் " ரகம் கைத்தறித் துணி நமது ராஜ்யத்தில் எவ்வளவு தேங்கிக் கிடக்கிறது ?

(இ) இதனால் ஏற்பட்டுள்ள சிரமத்தைப் போக்க சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

(உ) மத்திய சர்க்கார் இதற்காக ஏதாவது உதவி செய்கிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) About 16,00,000 yards (sixteen lakhs yards) are reported to be the stocks left in this State.

(*b*) & (*c*) With a view to assist the marketing, the Government sponsored a delegation consisting of the Director of Handlooms, representatives of the Madras State Handloom Weavers' Co-operative Society and leading private exporters of handloom cloth to the East Asian countries to explore markets for Bleeding Madras and other varieties of handloom fabrics. The State Society has been advised to make ready-made garments from "Bleeding Madras" to facilitate sales. This Government have also requested the Government of India to purchase the entire accumulated stock of Bleeding Madras through the Handloom Export Organisation. Their decision is awaited.